# செய்தி மடல்

## NEWSLETTER - APRIL 2010

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

### 23வது ஆண்டுக் கலை விழா

எமது 23வது ஆண்டுக் கலை விழா மார்ச் மாதம் 14ம் திகதி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக்கலைவிழாவில் பாலர் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமிழ்மொழியில் அவர்களின் திறனையும், எமது கலை கலாசார பண்புகளையும் எடுத்துக்காட்டி அனைவரது பாராட்டையும் பெற்றார்கள்.

இக்கலைவிழாவின் வெற்றிக்கு பலவகைகளிலும் உதவிய பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், வியாபார நிறுவனங்கள், தமிழ் அமைப்புக்கள் அனைவருக்கும் கல்வி நிலையம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

### தமிழ் அறிவுப்போட்டி - 2010

இவ்வருடம் தமிழ் அறிவுப்போட்டி மே மாதம் 8ம், 15ம் திகதிகளில் நடைபெற உள்ளது. இதற்கான மாதிரிவினாக்களை நீங்கள் எமது கல்வி நிலைய இணையத் தளத்தின் முதற் பக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

08.05.2010 – பாலர் ஆரம்பவகுப்பு முதல் 5 வரை
15.05.2010 – 6ம் வகுப்புமுதல் 12ம் வகுப்புவரை

### மாணவ உதவி ஆசிரியர்கள்

இவ்வருடமும் எமது கல்விநிலையத்தில் உயர்தரவகுப்புகளில் படிக்கும் மாணவர்களும், படித்த மாணவர்களும் உதவி ஆசிரியர்களாக கீழ்வகுப்பு ஆசிரியர்களுக்கு உதவிபுரிந்து வருகிறார்கள். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை கவனிப்பதில் அதிகநேரம் எடுப்பதுடன், படிப்பித்தல் தரமும் மேலும் உயர்ந்துள்ளது எனலாம்.

### சிறந்த மாணவர்கள்

2009ம் ஆண்டுக்கான சிறந்த மாணவர்களாக 12 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் செல்வி ஆர்த்திகா சிற்சபேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 12 வயதிற்கு கீழ்ப்பட்டோர் பிரிவில் சிறந்த மாணவராக செல்வி ஹரதர்சனா கண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கு எமது கல்வி நிலையத்தின் பாராட்டுக்கள். இவர்கள் Community Languages Schools இனால் Minister’s Awards க்கு விண்ணப்பங்களைக் கேட்கும் போது நியமிக்கப்படுவார்கள்.

### பாடற்குழு

எமது கல்வி நிலைய பாடல் குழுவிற்கு இவ்வாண்டிற்கான புதிய தலைவராக செல்வி மதுரா ஐயர் தெரிவாகி உள்ளார். இக்குழுவிக்குப் பொறுப்பாசிரியராக திருமதி கலா விக்னேஸ்வரன் இருப்பார். குழு மாணவர்கள் ஒழுங்காக பயிற்சியில் ஈடுபடுவதுடன், சிட்னியில் நடைபெறும் தமிழ் விழாக்களில் பாடுவதிலும் பங்கேற்பார்கள். இவ்வருடம் ஆண்டு 3 முதல் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் வகுப்பு ஆசிரியர்களிடமோ அல்லது பொறுப்பாசிரியரிடமோ பெயர்களை பதிவுசெய்து இணைந்து கொள்ளலாம்.

### மாணவர் சபை

இவ்வருடத்திற்கான மாணவர் சபைத் தலைவர்களாக மேற்பிரிவிற்கு செல்வன் ஆதித்தன் திருநந்தகுமாரும், செல்வி கோபிகா சத்தியதேவனும், கீழ்பிரிவிற்கு செல்வன் நிமலன் சுந்தரலிங்கமும், செல்வி சிபிதா வேலாயுதரும்இடம் பெறுகிறார்கள். இவர்களுக்கு மேற்பிரிவின் பொறுப்பாசிரியராக திருமதி விஜயநாதனும், கீழ்ப்பிரிவின் பொறுப்பாசிரியராக திருமதிதயாளனும் இருப்பார்கள். இம்மாணவர்கள் கல்விநிலைய மாணவர்களின் தேவைகளைக் கவனிப்பதுடன், ஒழுக்க, ஒழுங்கு நடவடிக்கைகளை கவனிப்பதிலும் ஈடுபடுவார்கள்.

### மாணவர்களின் விவரக்கோவை
### Student Information Database

கல்வி நிலைய மாணவர்களின் விவரக்கோவையை பூரணப்படுத்துவதற்கு நாங்கள் எமது இணையத்தளத்தின் முற்பக்கத்தில் ஒரு படிவத்தினை இணைத்து உள்ளோம். இதனை நீங்கள் பிரதான பாடசலையில் எவ்வாறு விபரங்களைக் கொடுத்துள்ளீர்களோ, அதேபோல் பூர்த்திசெய்து, அப்படிவத்தின் வலதுபக்க மேல் முனையில் இருக்கும் SUBMIT BY EMAIL என்ற button இனை click செய்வதன் முலம் எமக்கு மின்னஞ்சலில் (email) அனுப்பி வைக்கலாம். இதனால் எமக்கு உங்களுடன் அவசிய நேரத்தில் தொடர்புகொள்வதற்கும், அரசாங்க மானியத்தினைப் பெறுவதற்கும், சான்றிதழ்களில் சரியாகப் பெயரை எழுதுவதற்கும் உதவியாக இருக்கும்.

**பாடசாலைக் கட்டணம்**

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்களாகிய நீங்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு மிகவும் பணிவன்புடன் நிர்வாகக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

**ஞாயிறு தமிழ்ப் பாடசாலை**

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 10 மணி தொடக்கம் 11:30 மணிவரை தமிழ்ப்பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது.

**இரண்டாம் தவணை ஆரம்பம் - 24.04.2010**

**முக்கிய தினங்கள்**

24.04.10 – இரண்டாம் தவணை ஆரம்பம்
08.05.10 – தமிழ்அறிவுப்போட்டி(பாலர்–5ம்வகுப்பு)
15.05.10 – தமிழ்அறிவுப்போட்டி(6ம்-12ம்வகுப்பு)
29.05.10 – எழுத்துப் பரீட்சை
12.06.10 – வாசித்தல் பரீட்சை
19.06.10 – அரையாண்டுப் பரீட்சை
03.07.10 – தமிழ்அறிவுப்போட்டி பரிசளிப்பு தினம்
03.07.10 – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
03.07.10 – 2ம் தவணை நிறைவு நாள்

**கலைவிழா படங்களைப் பெறவிரும்புவோர் தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளவும்**

**KalaiVizha 2010 – Choir Group**




**KalaiVizha 2010 – Prize Giving**

